பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 கார்த்திகை 03 வெள்ளிக்கிழமை 19.11.2021 கதிர் 242

## கொரோனாத் தொற்றால் பருத்தித்துறையில் வயோதிபர் மரணம்

யாழ்., பருத்தித்துறையைச் சேர்ந்த வயோதிபர் ஒருவர் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்துள்ளார்.

குறித்த வயோதிபர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் ☞2

# ஆள்காட்டிவெளி மாவீரர் இல்லத்தின் பொதுச்சுடர் ஏற்றும் பீடம் இடித்தழிப்பு

## துயிலும் இல்ல ஏற்பாட்டுக் குழு கடும் கண்டனம்



(ந.லோகதயாளன்)

மன்னார், மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள ஆள்காட்டிவெளி மாவீரர் துயிலும் இல்லத்தின் பிரதான சுடர் ஏற்றும் பீடம் முற்றாக இடித்தழிக்கப்பட்டது.

அரச பயங்கரவாதத்தின் மிலேச்சத்தனமான செயல் என மாவீரர் துயிலும் இல்ல ஏற்பாட்டுக் குழு கண்டனம் தெரிவித்துள்ளது.

இவ்விடயம் தொடர்பாக துயிலும் இல்ல ஏற்பாட்டுக் குழுவின் ஏற்பாட்டாளரும் தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவருமாகிய வி.எஸ். சிவகரன் கருத்துத் தெரிவிக்கையில்-

துயிலும் இல்ல நுழைவாயிலுக்கு அருகில் இராணுவம் உள்ள போது யார் உடைத்திருக்க முடியும் என்பது வெளிப்படையாகவே தெரிகின்றது.

பல வருடங்களாக இருந்த இந்தப் பொதுச்சுடர் ஏற்றும் பீடத்தை சற்றும் மனிதாபிமானம் இன்றி மிலேச்சத்தனமான முறையில் உடைத்து ☞2

# கூட்டு நினைவுகூர்தல் ஈழத்தமிழர் தேசியத்தின் பிரிக்கமுடியாத அங்கம்

## வடக்கு - கிழக்கு குருக்கள் துறவிகள் நிலைமையை தெளிவுபடுத்தி அறிக்கை

(ந.லோகதயாளன்)

**ஈழத்தமிழர்களின் கூட்டு நினைவுகூர்தல் என்பது தமிழ்த் தேசியக் கட்டுமானத்தின் பிரிக்க முடியாத அங்கமாக உள்ளது என்பதை நினைவூட்டுகின்றோம். ஈழத் தமிழர்களின் விடுதலைக்கான எமது தொடர் அர்ப்பணத்தையும் அனைத்துத் தரப்புக்கும் மீண்டுமொருமுறை உறுதி செய்கின்றோம்.**

**– இவ்வாறு வடக்கு, கிழக்கு நீதிக்கும் அமைதிக்குமான குருக்கள் துறவிகள் அமைப்பு இன்று விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.** ☞2

# புதிய டெல்டா திரிவு இங்கு அடையாளம்



இலங்கையில் மற்றுமொரு டெல்டா வைரஸ் கண்டறியப்பட்டுள்ளது என ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் மூலக்கூறு உயிரியல்துறை பிரிவின் பேராசிரியர் வைத்தியர் சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.

தமது உத்தியோகபூர்வ டுவிட்டர் தளத்தில் அவர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

இதற்கு முன்னர் பீ.1.617.2.28 என்ற டெல்டா உப வைரஸ் திரிவு நாட்டில் அடையாளம் காணப்பட்டிருந்த நிலையில் தற்போது பீ.1. 617.2.104 என்ற டெல்டா உப ☞2

# யாழ்ப்பாணம் நீதிமன்ற எல்லையில் மாவீரர் நினைவேந்தலுக்குத் தடை!

(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் மாவீரர் நாள் நிகழ்வுக்குத் தடை விதிக்கக் கோரி, பொலிஸாரால் முன்வைக்கப்பட்ட விண்ணப்பத்துக்கு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது.

கோப்பாய் மற்றும் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள், சார்பில் இந்த மனுக்கள் இன்று யாழ்ப்பாணம் நீதிவான் நீதி ☞2

## பொம்மைவெளியில் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட பெண் சிக்கினார்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ். பொம்மைவெளியில் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபடும் பிரதான சந்தேகநபரான பெண் ஒருவர் மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவின் போதைப்பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொம்மைபெளிப் பகுதியில் நீண்டகாலமாகப் போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்டு வந்தார் எனக் கூறப்படும் ☞2

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகையில் இருந்த வவுனியா வடக்கு பிரதேச சபையின் பாதீடு தோல்வி!

(வவுனியா நிருபர்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகையில் இருந்த வவுனியா வடக்கு பிரதேச சபையின் 2022ஆம் ஆண்டுக்கான பாதீடு தோல்வியடைந்துள்ளது.

வவுனியா வடக்கு பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான பாதீடு தவிசாளர் சு.தணிகாலசத்தால் சபையில் இன்று முன்வைக்கப்பட்டது. இதையடுத்து பாதீடு தொடர்பில் உறுப்பினர்களின் வாதப் பிரதிவாதங்கள் நடைபெற்றன. ☞2

# பட்ஜட் முடிவடைந்த பின்னர் அமைச்சரவையில் மாற்றம்

## கோட்டாபய யோசனை



வரவு - செலவுத் திட்ட விவாதம் முடிவடைந்த பின்னர், அமைச்சரவையில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ திட்டமிட்டுள்ளார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி சில அமைச்சுகள் கைமாறவுள்ளதுடன், மேலும் சில அமைச்சுகளுடன் புதிய விடயதானங்கள் இணைக்கப்படவுள்ளன. இதற்கான ஏற்பாடுகள் தற்போது இடம்பெற்று வருகின்றன எனக் கூறப்படுகின்றது. ☞2

## கொரோனாவால் தென்மராட்சியில் 16 நாள்களில் 4 பேர் பரிதாபச் சாவு!

யாழ். தென்மராட்சிப் பகுதியில் கொரோனாப் பரவல் மிகத்தீவிரம்பெற்றுள்ளதுடன், கடந்த 16 நாள்களில் மாத்திரம் 118 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டு, நான்கு மரணங்கள் நிகழ்ந்துள்ளன என்று சுகாதாரத் தரப்பினர் தகவல் வெளியிட்டுள்ளனர்.

தினமும் சராசரியாக 8 முதல் 10 தொற்றாளர்கள் என்றளவில் எண்ணிக்கை உயரத் தொடங்கிவிட்டது எனவும் அவர்கள் எச்சரித்துள்ளனர்.

சுகாதாரநடைமுறைகளை மக்கள் இறுக்கமாகப் ☞2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## பருத்தித்துறையில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரிவில் சேர்க்கப்பட்டிருந்த நிலையிலேயே உயிரிழந்துள்ளார்.

யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையிலேயே உயிரிழந்த வயோதிபருக்குக் கொரோனாத் தொற்றுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் வசித்து வந்த 74 வயதுடைய எம்.சிவசுப்பிரமணியம் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என்று மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆள்காட்டிவெளி ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேதப்படுத்தியுள்ளனர்.

நேற்று மாலை தகவல் கிடைத்ததும் நானும் துயிலும் இல்ல ஏற்பாட்டுக் குழுவின் பொருளாளரும் மன்னார் நகர சபை தலைவருமாகிய அன்ரனி டேவிற்சனும் சென்று பார்வையிட்டோம்.

எனவே, இவ்வாறு தீபமேற்றும் பீடத்தை அழிப்பதன் ஊடாக அரசு சிற்றின்பம் அடையலாம்.

தமிழ் மக்களின் மனங்களில் அனுதினமும் தியாகச் சுடராக ஒளிர்ந்து கொண்டிருக்கும் எமது விடுதலை வீரர்களின் தியாகத்தையோ இலட்சிய வேட்கையையோ அரசால் சிதைத்துவிட முடியாது என்பதை இந்தக் கேவலமான செயலில் ஈடுபடுவோர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

இந்தச் சம்பவம் மாவீரர்களின் பெற்றோர்கள் மத்தியில் மிகுந்த மன வேதனையை ஏற்படுத்தியுள்ளது - என்றார்.

## கூட்டு நினைவுகூர்தல் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

வடக்கு, கிழக்கு ஆயர் மன்றத்தின் 'போரில் இறந்தவர்களை நினைவு கூர்தல்'தொடர்பான அறிக்கை அண்மையில் ஆரம்பிக்கப்பட்டு இயங்கி வரும் வடக்கு, கிழக்கு ஆயர் மன்றம் வடக்கு, கிழக்கு வாழ் தமிழ் கத்தோலிக்க மக்களின் கிறிஸ்தவ வாழ்வை பண்பாட்டு மயமாக்கி அதற்கான செயற்பாடுகளை ஒருங்கிணைத்து நெறிப்படுத்துவதையும், ஒட்டுமொத்த ஈழத்தமிழ் மக்களின் கூட்டுரிமைகளுக்காக குரல் கொடுப்பதையும், இலங்கைத் தீவில் நீதியில் அடித்தளமிடப்பட்ட அமைதியை நிலைநாட்டுவதற்காக உழைப்பதையும் நோக்காகக் கொண்டு செயற்பட்டு வருகின்றது.

இந்நிலையில் அண்மையில் அவர்களால் வெளியிடப்பட்ட 'போரில் இறந்த அனைவரையும்' நினைவு கூர்ந்து இறை வேண்டல் செய்வதற்கான அழைப்பு தமிழ்தேசிய எதிர்ப்பலைகளை உருவாக்கியிருப்பதை அவதானித்து 'நீதிக்கும் அமைதிக்குமான குருக்கள் துறவிகள், வடக்கு, கிழக்கு' எனும் அமைப்பினராகிய நாம் மிகுந்த மன வேதனை அடைகின்றோம். ஆகவே, ஈழத்தமிழ் மக்களின் விடிவுக்கான கத்தோலிக்க திரு அவையின் தொடர் அர்ப்பணத்தை உறுதி செய்யும் முகமாக பின்வரும் கருத்துக்களை முன்வைக்க விரும்புகின்றோம்.

1. நவம்பர் மாதம் இறந்த அனைவருக்காகவும் இறை வேண்டல் செய்யும் மாதமாக உலகெங்கும் வாழும் கிறிஸ்தவ மக்களால் காலங்காலமாக அனுசரிக்கப்பட்டு வருகிறது. இக்காலத்தில் கல்லறைகளை தரிசிப்பதையும் இறந்தவர்களுக்கான வழிபாடுகளை மேற்கொள்வதையும் கிறிஸ்தவ மக்கள் தமது கடமையாக கருதி செயற்பாடுகளை முன்னெடுத்துவருகின்றனர். இத்தகைய ஒரு நீண்ட மரபின் ஒரு பகுதியாகவே நாம் வடக்கு, கிழக்கு ஆயர் மன்றத்தின் மேற்படி வேண்டுகோளை பார்க்கின்றோம். அதற்கு அப்பால் இதற்கு எந்தவித அரசியல் பரிமாணமும் இல்லை என்பதே எமது நிலைப்பாடு.

2. மேற்படி அழைப்பில் நவம்பர் மாத மூன்றாவது சனிக்கிழமையில் போரில் இறந்த அனைவருக்காகவும் செபிக்கும்படி அழைப்பு விடுக்கப்பட்டிருந்ததே தவிர நவம்பர் இருபதாம் திகதி என்றல்ல. இவ்வருடம் அது 20ஆம் திகதி வருகிறது என்பதற்கப்பால் இந்த தினத்துக்கு வேறு முக்கியத்துவம் கிடையாது. உதாரணமாக அடுத்தடுத்த வருடங்களில் இது முறையே 19, 18, 17, என மாறி வரும் என்பதை தெளிவுபடுத்த விரும்புகின்றோம்.

3. மே 18ஐ இதே ஆயர் மன்றம் ஈழத்தமிழ் இனப்படுகொலை நாளென பிரகடனப்படுத்தி நினைவுகூர கடந்த மே மாதத்தில் அழைப்பு விட்டிருந்ததையும் இங்கு நினைவூட்ட விரும்புகின்றோம். ஆகவே, போரில் இறந்த அனைவருக்காகவும் இறைவேண்டல் செய்வதென்பது தமிழர் நெஞ்சங்களில் வாழும் மாவீரர்களையும், இன அழிப்புக்குள்ளான தமிழ்மக்களின் தியாகங்களையும் சமரசம் செய்வதாகாது. ஏற்கனவே தமிழ் மக்கள் நினைவுகூருகின்ற நாள்களில் அவர்களை நினைவுகூர்வது வரலாற்றுக் கட்டாயம் என்பதையும் வலியுறுத்துகின்றோம்.

4. தமிழ்த் தேசியப் பரப்பு மத வரையறைகளைக் கடந்து ஈழத்தமிழ் மக்களை ஈழத்தமிழ்த்தன்மையில் ஒருங்கிணைக்கின்றது. இத்தகைய ஒரு சந்தர்ப்பத்தை பயன்படுத்தி எமது தமிழ்த் தேசிய ஒற்றுமையைக் குலைக்க முயலும் ஆபத்து பற்றியும் நாம் அனைவரும் விழிப்பாயிருக்க வேண்டும். தமிழ் மக்கள் மத்தியிலே அண்மையில் அதிகரித்துவரும் மத முரண்பாடுகள் குறித்து விரைந்து செயற்பட்டு நல்லிணக்கத்தையும் ஒத்துழைப்பையும் தொடர்ந்து பேண நாம் முன்வர வேண்டும்.

5. எதிர்காலத்தில் இத்தகைய தவறான புரிதல்களை தவிர்க்கும் முகமாக வடக்கு, கிழக்கு ஆயர் மன்றம், தமிழ்த் தேசியம் சார் விடயங்களில் வடக்கு, கிழக்கில் உள்ள ஏனைய சமயத் தலைவர்களோடும், சிவில் சமூக அமைப்புக்களோடும் நெருக்கமான ஒத்துழைப்பை தொடர்ந்து பேணும் என எதிர்பார்க்கின்றோம்.

இறுதியாக ஈழத்தமிழர்களின் கூட்டு நினைவுகூர்தல் என்பது தமிழ்த் தேசியக் கட்டுமானத்தின் பிரிக்க முடியாத அங்கமாக உள்ளது என்பதை நினைவூட்டி, ஈழத்தமிழர்களின் விடுதலைக்கான எமது தொடர் அர்ப்பணத்தையும் அனைத்துத் தரப்புக்கும் மீண்டுமொரு முறை உறுதி செய்கின்றோம் - என்றுள்ளது.

## புதிய டெல்டா ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைரஸ் திரிவான டெல்டா உப பரம்பரை வைரஸ் கண்டறியப்பட்டுள்ளது எனவும் அவர் அந்தப் பதிவில் கூறியுள்ளார்.

இந்தப் புதிய திரிவு அதிக வீரியமிக்கதாக இருக்கலாம் என்றும் சந்திம ஜீவந்தர மேலும் தெரிவித்துள்ளார்.

## யாழ்ப்பாணம் நீதிமன்ற ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்றில் சமர்ப்பிக்கப்பட்டன.

முன்னர் கோப்பாயில் மாவீரர் துயிலும் இல்லம் அமைந்திருந்த இடத்தில் அமைந்துள்ள இராணுவத்தின் 512 பிரிகேட் தலைமையகத்துக்கு முன்பாகவும், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக சூழலிலும் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய எல்லையிலும் மாவீரர் நாளை நடத்துவதற்கான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன எனவும் அந்த மனுவில் கூறப்பட்டது.

குற்றவியல் சட்டத்தின் 120 ஆவது பிரிவுக்கு அமையவும், பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் படியும், இந்த நிகழ்வை நடத்துவது குற்றம் என்றும் இதனைத் தடை செய்யுமாறும் பொலிஸார் கோரியுள்ளனர். இந்த மனு இன்று யாழ்ப்பாணம் நீதி மன்ற பதில் நீதிவான் வி.ரி. சிவலிங்கம் முன்பாக விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது நாளைமறுதினம் 21ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் 28ஆம் திகதி வரை ஒரு வாரத்துக்கு நினைவேந்தல் நிகழ்வை நடத்தத் தடை உத்தரவு நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டது.

## பொம்மைவெளியில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதான சந்தேகநபரான 38 வயதுடைய பெண்ணே இவ்வாறு கைது செய்யப்பட்டவராவார்.

யாழ். மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவின் போதைத் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி மேனன் தலைமையிலான பொலிஸ் குழுவினரால் குறித்த பெண் நேற்றிரவு சுற்றிவளைக்கப்பட்டு கைது செய்யப்பட்டார்.

அவரிடமிருந்து 2.40 கிராம் ஹெரோயின் பொலிஸாரால் மீட்கப்பட்டது. குறித்த பெண் பல போதைப்பொருள் வழக்குகளுடன் சம்பந்தப்பட்டவர் என்பதுடன் ஏற்கனவே மேல் நீதிமன்ற வழக்கில் மேல் நீதிமன்றத்தால் பிணை வழங்கப்பட்டவர் என்பதுடன் பிணையில் உள்ள நிலையிலும் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டு வருகின்றார் எனக் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையிலேயே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, மேற்படி பொலிஸ் குழுவினரால் யாழில் பிரதான போதைப் பொருள் சூத்திரதாரிகள் தொடர்ச்சியாகக் கைதுசெய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## தமிழ்த் தேசிய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதனைத் தொடர்ந்து பாதீடு சபையின் வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. இதன்போது 26 உறுப்பினர்களைக் கொண்ட வவுனியா வடக்கு பிரதேச சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 7 உறுப்பினர்கள் மட்டும் பாதீட்டுக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் 4 உறுப்பினர்களும், ஐக்கிய தேசியக் கட்சியின் 2 உறுப்பினர்களும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 2 உறுப்பினர்களும், ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் 3 உறுப்பினர்களும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் 3 உறுப்பினர்களும், சுயேச்சைக் குழுவின் ஒரு உறுப்பினரும் என 15 பேர் பாதீட்டுக்கு எதிராக வாக்களித்தனர். இதனால் மேலதிக 8 வாக்குகளால் பாதீடு தோல்வியடைந்தது.

வாக்கெடுப்பின்போது ஐக்கிய தேசியக் கட்சியின் ஒரு உறுப்பினர் நடுநிலைமை வகித்ததுடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பி., ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி ஆகிய கட்சிகளைச் சேர்ந்த ஒவ்வொரு உறுப்பினர் வீதம் மூவர் சபைக்கு சமூகமளித்திருக்கவில்லை. (100)

## பட்ஜட் முடிவடைந்த ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரச நிறுவனங்களின் உயர் பதவிகளிலும் சில மாற்றங்களை ஏற்படுத்தவும் ஜனாதிபதி உத்தேசித்துள்ளார்.

இராஜாங்க அமைச்சர்களான ரொஷான் ரணசிங்க, சனத் நிஷாந்த ஆகிய இருவரும் அமைச்சரவைக்கு உள்வாங்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

2022ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் மீதான விவாதம் எதிர்வரும் டிசெம்பர் 10 ஆம் திகதி நிறைவடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கொரோனாவால் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின்பற்றாமை காரணமாக சமூகத்தில் தொற்று தீவிரமாகப் பரவியிருப்பதற்கான சாத்தியப்பாடுகள் காணப்படுகின்றன எனவும் அவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டவர்கள் அனைவரும் நோய் அறிகுறிகளுடன் தாமாக வந்து அன்டிஜன் பரிசோதனைக்கு தம்மை உட்படுத்திக்கொண்டனர் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

கொரோனாப் பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் இலவச துரித அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும் சுகாதாரத் தரப்பினர் அறிவித்துள்ளனர்.

அது குறித்து அவர்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட இடங்களில் வசிப்பவர்கள் கொரோனா அறிகுறிகள் தென்படுமாயின், உடனடியாக தங்களை சுய தனிமைப்படுத்திக்கொள்ளுங்கள்.

அத்தோடு, காலதாமதமின்றி கொடிகாமம் பிரதேச வைத்தியசாலை, வரணி பிரதேச வைத்தியசாலை அல்லது சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் துரித அன்டிஜன் பரிசோதனைக்கு உட்படுத்திக் கொள்ளுங்கள்.

இவற்றுக்கு மேலதிகமாக சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் செவ்வாய்க்கிழமை, வியாழக்கிழமை மற்றும் சனிக்கிழமை ஆகிய மூன்று தினங்களும் காலை 8.30 மணிக்கு குறித்த பரிசோதனை தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது - என்றார்.




# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ரிஷாத்தின் சமாளிப்பு

'எங்கப்பன் குதிருக்குள் இல்லை' என்ற மாதிரி பதில் கூறிக் கொண்டிருக்கின்றார் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் பதியுதீன் எம்.பி.

ஆட்சித் தரப்புடன் மறைமுக இணக்கத்திட்டம் ஒன்றுக்கு அவரும் அவரது கட்சியினரும் வந்து விட்டமை குறித்து கேட்கப்பட்ட கேள்விகளுக்கு அவர் அளித்து வரும் பதில்களே இப்படி எண்ண வைக்கின்றன.

ஈஸ்டர் ஞாயிறு தொடர் குண்டுத் தாக்குதல் விவகார்த்தை ஒட்டிக் கைது செய்யப்பட்ட அவரும் அவரது சகோதரரும் நீண்ட நாள்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தனர்.

திடுதிப்பென அவருக்கு எதிரான பல்வேறு வழக்குகளும் ஒன்றாக நீதிமன்றத்தில் எடுக்கப்பட்டு, அவை அனைத்துக்கும் சேர்த்து அவருக்குப் பிணை அனுமதி வழங்கப்படுகின்றது.

சிலவாரங்களில் அதேபோன்று அவரது சகோதரருக்கும் பிணை வழங்கப்படுகின்றது.

வர்த்தமானி அறிவித்தல் மூலம் மாகாண ஆளுநரால் மன்னார் பிரதேச சபைத் தலைவர் பதவியிலிருந்தும் உறுப்பினர் பதவியிலிருந்தும் சட்ட ரீதியாக நீக்கப்பட்ட அவரின் ஆதரவாளர், மாகாண ஆளுநர் மாற்றப்பட்டு, புதிய ஆளுநர் மூலம் பழைய வர்த்தமானி அறிவித்தல் கைவாங்கப்பட்டு, மீண்டும் அப்பதவிகளுக்கு வர வழி செய்யப்படுகின்றார்.

ராஜபக்ஷாக்கள் தொடர்பில் மிக மோசமான – மிகக் கசப்பான – அனுபவங்களின் பின்னரும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷாவை நாடாளுமன்றத்திலேயே ரிஷாத் பதியுதீன் வானளாவப் புகழ்கின்றார்.

ஆட்சித் தரப்புக்கு எதிரான பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி கடந்த வாரம் பெரும் எடுப்பில் முன்னெடுத்த மக்கள் உணர்வெழுச்சிப் போராட்டங்களில் ரிஷாத்தினதோ அவரது கட்சியினரதோ தலைக் கறுப்பைக் கூடக் காணவில்லை.

இந்தப் பின்புலத்திலேயே ஆளும் தரப்புக்கும் அவரது கட்சிக்கும் இடையில் இரகசிய பேர உடன்பாடு உருவாகி விட்டிருப்பதாகத் தென்னிலங்கை அரசியலில் அதிகம் கதை அடிபடுகின்றது. ஆனால் அவர் அதை மறுக்கின்றார்.

எனினும், நாடாளுமன்றத்தில் பிரதமரைத் தாம் புகழ்ந்தமையையும், ஐக்கிய மக்கள் சக்தியின் எதிர்ப்புப் பேரணியில் தாங்கள் பங்கு பற்றாதமையையும் அவர் ஒப்புக் கொள்கின்றார்.

"வரவு – செலவுத் திட்டம் குறித்து நாங்கள், எமது கட்சி, இன்னும் முடிவு எதையும் எடுக்கவில்லை. ஆனாலும் எமது கட்சி இந்த வரவு – செலவுத் திட்டம் குறித்துத் திருப்தியடையவில்லை"– என்கிறார் அவர்.

வரவு – செலவுத் திட்டத்தை ஆதரிப்பதற்கான பேரத்தில் உச்ச வருமதியைப் பேசிப் பெறுவதற்காக ஆரம்பத்தில் இப்படி எதிர்மறையாகப் பேசுபவர் போன்றே அவரது கருத்துத் தெரிகின்றது.

"இந்த நாட்டில் அமைதி, ஒற்றுமை, சமாதானம், சகோதரத்துவம் போன்றவை எல்லாம் நிலவ வேண்டும் என விரும்புபவர்கள் எல்லோரும், 'ஒரே நாடு;ஒரே தேசம்' என்பது தொடர்பான ஜனாதிபதி செயலணியின் தலைமைத்துவம் வண ஞானசார தேரருக்கு வழங்கப்பட்டமையை ஏற்றுக்கொள்வார்கள். என் கருத்தும் அதுதான்" என்று ரிஷாத் பதியுதீன் எம்.பி கூறியிருக்கின்றார்.

அரசமைப்பின் இருபதாவது திருத்த விடயத்தில் அவரது கட்சியினர், முஸ்லிம்கள் உட்பட சிறுபான்மையினருக்கு முதுகில் குத்தியமை போல, இந்த வரவு – செலவுத் திட்டத்திலும் அரசுக்குக் கூசா தூக்கப் போகின்றனர் என்பது இப்போதே தெரிகின்றது.. அதற்கான சமாளிப்புப் பேச்சுக்களை அவர் இப்போதே ஆரம்பித்துவிட்டார் என்பதுதான் இன்றைய நிலைமையாகும்.

# தேவையான அதிகாரத்தைப் பெற்றும் அரசு மக்கள் பிரச்சினைக்குத் தீர்வு காணவில்லை

## கரு ஜயசூரிய சாடல்



அரசாங்கம் தேவையான அதிகாரத்தைப் பெற்றும் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவில்லை என நீதியான சமூகத்துக்கான தேசிய இயக்கத்தின் தலைவரும் முன்னாள் சபாநாயகருமான கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த அவர்–

தற்போதைய அரசாங்கத்தின் நிர்வாகத்தில் ஏற்பட்டுள்ள குளறுபடிகளால் அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் விண்ணை முட்டும் அளவிற்கு உயர்ந்துள்ளன எனவும், இதனால் மக்கள் மன உளைச்சலுக்கு உள்ளாகியுள்ளனர் எனவும் குறிப்பிட்டார்.

இதன்காரணமாக மக்கள் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்காக வரிசையில் நின்று பல மணிநேரங்களை வீணடித்து வருகின்றனர் என அவர் தெரிவித்தார்.

20 ஆவது திருத்தச் சட்டத்தின் மூலமும் மூன்றில் இரண்டு பெரும்பான்மையின் மூலமும் அரசாங்கம் தங்களுக்குத் தேவையான அதிகாரத்தைப் பெற்ற போதிலும் அவர்களால் இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

உர விவகாரத்தில் அரசு என்ன செய்கிறது எனக் கேள்வியெழுப்பிய அவர், இதற்கான இழப்பீடு தொடர்பாக வரவு – செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்படவில்லை எனவும் சுட்டிக்காட்டினார்.

# பாடசாலை மாணவர்களிடையே அதிகமாகப் பரவும் கொரோனா

## பொதுச்சுகாதார பரிசோதகர்கள் எச்சரிக்கை

கல்வி நடவடிக்கைகளுக்காக பாடசாலைளை மீண்டும் திறந்த பின்னர் மாணவர்களிடையே அதிகமாக கொரோனா பரவி வருவதாக பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக ஆங்கில ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிட்டுள்ள அந்த தொழிற்சங்கத்தின் தலைவர் உபுல் றோஹண, பல மாணவர்கள், குறிப்பாக ஆசிரியர்கள் மற்றும் கல்வி ஊழியர்கள் கொரோனா வைரஸுக்கு சாதகமாக சோதனை செய்துள்ளனர் எனத் தெரிவித்தார்.

பல மாவட்டங்கள் உட்பட தென், மேல் மற்றும் மத்திய மாகாணங்களில் உள்ள பெரும்பாலான பாடசாலைகளில் பல கொரோனா தொற்றுக்கள் பதிவாகியுள்ளன என அவர் குறிப்பிட்டார். சமூகத்தில் பல நேர் மறையான தொற்றுக்கள் உள்ளன எனவும் அவர்களில் பெரும்பாலானோர் தாங்கள் வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதை அறியவில்லையென்றும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் இதுபோன்ற குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகள் பாடசாலைக்குச் சென்ற பின்னர் மற்ற குழந்தைகளுக்கு வைரஸ் பரவக்கூடும் என்று அவர் கூறினார்.

எனவே, பெற்றோர்களும் ஆசிரியர்களும் தமது பிள்ளைகளை எப்போதும் முகமூடி அணியுமாறும், கைகளைக் அடிக்கடி கழுவி அல்லது சுத்தப்படுத்துமாறும் அறிவுறுத்த வேண்டுமென அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

# சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மின் மயானமாக்கத் திட்டம்

## கலாநிதி அகிலன் 5 லட்சம் ரூபா வழங்கனார்

தென்மராட்சி மக்களின் நீண்டகால வேண்டுகோளுக்கு இணங்க சமூகசேவையாளர் கலாநிதி அகிலன் முத்துக்குமாரசுவாமி ஐந்து இலட்சம் ரூபா நிதி அன்பளிப்புடன் சாவகச்சேரி 'கண்ணாடிப்பிட்டி மின் மயான திட்டமானது' தென்மராட்சி நிறுவனங்களின் சர்வதேச ஒன்றியத்தின் தலைவர் வி.எஸ். துரைராஜாவால் கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சி மண்ணைச் சேர்ந்த அனைவரும் உங்களால் இயன்ற நேரடிப் பங்களிப்பினை வழங்குமாறு தென்மராட்சி நிறுவனங்களின் சர்வதேச ஒன்றியத்தினர் கேட்டுள்ளனர்.

நேரடியாக பணம் வைப்புச் செய்வதற்கு:-
Chavakachcheri Kannadippiddy Electrical Cemetry Project
Bank :- People's Bank, Chavakachcheri
A/C No :- 110-2-0017-0008145
1)Mr.Sivabalan Namasivayam
member of the Chamber of commerce
2)Mrs.Sivamankai Ramanathan
Chairman urban Council, Chavakachcheri
3)Mrs.Devarathy Sutheskaran
Deputy Principal, Drieberg College
Member of the International Federation of Thenmaradchy Foundation.

# மண்சரிவு அபாயமுள்ள வீதிகளை உடன் ஆய்வு செய்தல் வேண்டும்

## ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவிப்பு

இலங்கையின் பல்வேறு பகுதிகளில் மண்சரிவு அபாயமுள்ள நெடுஞ்சாலைகள் மற்றும் வீதிகளை முறையான ஆய்வுகள் மற்றும் கண்காணிப்புகளை மேற்கொள்ளுமாறு அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர் ஆர்.டபிள்யூ.ஆர்.பிரேமசிறி, வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் சமிந்த அத்தலுவகே மற்றும் பணிப்பாளர் நாயகம் சர்தா வீரகோன் ஆகியோருக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

சில வீதிகள் அமைக்கப்பட்டு பல வருடங்களாகியும் இவ்வாறு மண்சரிவு அபாயம் உள்ள பகுதி வீதிகள் தொடர்பாக உரிய முறையில் ஆய்வு செய்யப்படவில்லை எனத் தமக்குத் தகவல் கிடைத்துள்ளதாக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

வீதி அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரிகள், கட்டட ஆய்வு நிறுவன நிபுணர்கள் ஆகியோரின் உதவியுடன் இந்த வீதிகள் தொடர்பாக ஆராய்ந்து விரைவில் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# பாகிஸ்தான் இராணுவத்தினருக்கு எதிராக தொடரும் போராட்டம்



லுசிஸ்தான் பல்கலைக்கழகத்தினைச் சேர்ந்த இரண்டு மாணவர்களை பாகிஸ்தான் இராணுவத்தினர் கடத்திச் சென்றமையைக் கண்டித்து போராட்டங்கள் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன. அனைத்து கல்வி நிறுவனங்களிலும் வகுப்புகள் மற்றும் பரீட்சைகளைப் புறக்கணிக்குமாறு மாணவர் தலைவர்கள் அழைப்பு விடுத்துள்ளனர் என எக்ஸ்பிரஸ் டெய்லி தெரிவித்துள்ளது. கடத்தப்பட்டவர்கள் பலுசிஸ் தானின் நோஷ்கி மாவட்டத்தில் வசிக்கும் லால் மொஹமட்டின் புதல்வர்களான பசிஹ் பலூச் சோஹைல் அஹமட் என அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களை கடந்த திங்கட்கிழமை யன்று பல்கலைக்கழக விடுதியில் இருந்து பாகிஸ்தான் இராணுவத்தினர் வலுக்கட்டாயமாக அழைத்துச் சென்றதையடுத்து வலுக்கட்டாயமாக காணாமல் போயுள்ளனர் என 'தி பலுசிஸ்தான் போஸ்ட்' என்ற பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அதேநேரம், பல்கலைக்கழக விடுதியில் இருந்தபோதே இவ்விரண்டு மாணவர்களும் காணாமல் போனார்கள் என தெரிவித்த மாணவர் தலைவர்கள் 'எமது நண்பர்கள் காணாமலாக்கப்பட்டமைக்காக நாங்கள் நிர்வாகத்திடம் எதிர்ப்பு தெரிவித்தோம், ஆனால் அது தொடர் பில் எந்தக் கவனமும் எடுக்கவில்லை. பின்னர் நாங்கள் பல்கலைக் கழகத்தின் வாயிலில் எதிர்ப்பு போராட்டம் செய்ய வேண்டிய நிலைமைக்கு தள்ளப்பட்டோம்' எனவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

பலுசிஸ்தானைப் பொறுத்தவரையில் வலிந்து காணாமல்போகும் சம்பவங்கள் தொடர்பில் நீண்ட வரலாறு காணப்படுகின்றன. அங்கு ஆயிரக்கணக்கான பலூச்சுக்கள் கடத்தப்பட்டு காணாமல் போயுள்ளனர். கொலைகள் மூலம் நூற்றுக்கணக்கானவர்கள் அழிக்கப்பட்டுள்ளனர். ஆயிரக்கணக்கானவர்களுக்கு என்ன நடந்தது என்பதையே கண்டுபிடிக்க முடியாத நிலைமை காணப்படுகின்றது.

மனித உரிமைகள் அமைப்புக்கள் செயற்பட முடியாத நிலைமையும், ஊடகங்கள் குரல் எழுப்ப முடியாத நிலைமையும் நீடிப்பதால் அங்கு மேற்படி நிலைமைகள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன.

பலுசிஸ்தானிலுள்ள ஒடுக்கப்பட்ட மக்களை ஆக்கிரமித்த முதல் நாளிலிருந்தே அவர்களை மௌனிகளாக வைத்திருப்பதற்கு பாகிஸ்தான் அரசு வலுக்கட்டாயமாக காணாமலாக்குதலை ஒரு கருவியாக பயன்படுத்தி வருகின்றது. கடத்தப்பட்டவர்களில் பலர் கொல்லப்பட்டாலும் இன்னும் பலர் இராணுவ இரகசிய அறைகளில் மனிதாபிமானமற்ற சித்திரவதைகளை தற்போது வரையில் எதிர்கொண்ட வண்ணமுள்ளனர்.

# புர்கினா பாசோ ஜனாதிபதியை பதவி விலகக் கோரி போராட்டம்



புர்கினா பாசோவின் தலைநகர் ஒவாகடுகோவில் ஜனாதிபதி ரோச் கபோரை பதவி விலகக் கோரி நூற்றுக்கணக்கானவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த வார இறுதியில் 28 இராணுவத்தினர் மற்றும் நான்கு பொதுமக்கள் கொல்லப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கில், போராளிகளை கட்டுப்படுத்த ஜனாதிபதி தவறிவிட்டார் என அவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். சமீபத்திய தாக்குதல்கள் தொடர்பாக கடந்த செவ்வாய்க்கிழமை தொடக்கம் மூன்று நாள்கள் தேசிய துக்க தினம் அனுஷ்டிக்கப் படுகின்றது. இந்த மாத தொடக்கத்தில் மாலியின் வடக்கு எல்லைக்கு அருகில் உள்ள சந்தையில் துப்பாக்கி ஏந்தியவர்கள் நடத்திய தாக்குதலில் பலர் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பிரித்தானியாவில் 10 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு




பிரித்தானியாவில் எரிபொருள் மற்றும் எரிசக்தி செலவுகள் அதிகரித்து வருவ தால் ஏறக்குறைய 10 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு வாழ்க்கைச் செலவு ஒக்ரோபரில் 4.2% உயர்ந்துள்ளது.

பணவீக்கத்தின் நுகர்வோர் விலைக் குறியீடு தற்போது இங்கிலாந்து வங்கியின் இலக்கை விட இரண்டு மடங்கு அதிகமாக உள்ளது என தரவுகள் தெரிவிக்கின்றன.

போக்குவரத்து செலவுகள், எரிவாயு, மின்சார கட்டணம் மற்றும் பயன்படுத்திய கார்கள் அனைத்தின் விலைகளும் உயர்ந்துள்ளன என தேசிய புள்ளி யியல் அலுவலகம் தெரிவித் துள்ளது. கொரோனா பரவலை அடுத்து அமுல்படுத்தப்பட்ட முடக்க கட்டுப்பாடுகளுக்கு பின்னர் பொருளாதார நடவடிக்கைகள் மீண்டும் வழமைக்கு திரும்பிய நிலையில் பணவீக்கம் அதிகரித்துள்ளது.

இந்த சிக்கலைச் சமாளிக்க எதிர்வரும் மாதங்களில் வட்டி விகிதங்களை அதிகரிக்க வேண்டியிருக்கும் என இங்கிலாந்து வங்கி கூறியுள்ளது.

# ஊடகவியலாளர் மீதான கட்டுப்பாடுகளை தளர்த்த சீனாவும் அமெரிக்காவும் இணக்கம்



அமெரிக்காவும் சீனாவும் இரு நாடுகளினதும் பரஸ்பர ஊடகவியலாளர்கள் மீதான பயண மற்றும் விசா கட்டுப்பாடுகளை தளர்த்த ஒப்புக் கொண்டுள்ளன. சீனப் பிரதமர் மற்றும் அமெரிக்க ஜனாதி பதிக்கு இடையே இடம்பெற்ற மிகவும் எதிர்பார்ப்பு மிக்க பேச்சுக்குப் பின்னர் இந்த முடிவு எட்டப்பட்டுள்ளது. இந்த நடவடிக் கையானது ஊடகவியலாளர்கள் இரு நாடுகளிலி ருந்தும் சுதந்திரமாக நுழையவும் வெளியேறவும் அனுமதிக்கும் என அதிகாரிகள் கூறுகின்றனர்.

இதேவேளை இந்த ஒப்பந்தம் ஒரு வருடத்திற்கும் மேலாக கடினமான பேச்சுக்களின் விளைவு என அரசாங்க ஊடகமான 'சைனா டெய்லி' கூறியது.

மேலும் இரண்டு அரசாங்கங்களும் ஊடகவியலாளர்களின் விசாக்களின் செல்லுபடிக்காலத்தை மூன்று மாதங்களில் இருந்து ஒரு வருடமாக அதிகரித்துள்ளது.

# உகண்டாவில் பயங்கரவாதத் தாக்குதல் பாதுகாப்பை மேலும் பலப்படுத்திய கென்யா



உகண்டாவின் தலைநகரில் நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலைத் தொடர்ந்து பாதுகாப்பை மேலும் பலப்படுத்தியுள்ளதாக கென்யா அரசாங்கம் கூறியுள்ளது. எனவே மக்கள் விழிப்புடன் இருக்குமாறும் சந்தேகத் திற்கிடமான நபர்கள் குறித்து முறைப்பாடு வழங்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

தலைநகர் நைரோபிக்கு வெளியே உள்ள அதிகபட்ச பாதுகாப்பு உள்ள சிறைச்சாலையில் இருந்து பயங்கரவாத குற்றச்சாட்டுகளுக்காக தண்டிக்கப்பட்ட மூன்று கைதிகள் தப்பி ஓடியுள்ளனர்.

இந்நிலையில் உகண்டாவில், மூன்று தற்கொலை குண்டுதாரிகள் கம்பாலாவில் இரண்டு இடங்களில் வெடிகுண்டுகளை வெடிக்கச் செய்து பாரிய சேதத்தினை ஏற்படுத்தியுள்ளனர். குறித்த பயங்கரவாத தாக்குதலுக்கு ஐ.எஸ்.அமைப்பு பொறுப்பேற்றுள்ள நிலையில் அண்டை நாடான கென்யா அரசாங்கம் பாதுகாப்பை பலப்படுத்தியுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# 3 வேளாண் சட்டங்களும் மீளப்பெறப்பட்டன இந்தியப் பிரதமர் மோடி இன்று அறிவிப்பு



இந்திய மத்திய அரசால் கொண்டு வரப்பட்ட 3 வேளாண் சட்டங்களையும் திரும்பப் பெறுகிறேன் என பிரதமர் மோடி இந்திய மக்களுக்கு ஆற்றிய உரையில் தெரிவித்துள்ளார்.

பல்வேறு விவகாரங்கள் குறித்து இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நாட்டு மக்களுக்கு உரையாற்றினார். அப்போது அவர், "2014 ஆம் ஆண்டு முதல் விவசாயிகளுக்கு சேவை செய்வதையே நோக்கமாகக் கொண்டுள்ளோம். விவசாயிகளின் வேதனையை நேரடியாக நான் அறிவேன்.

நாட்டின் விவசாயிகளில் 80 சதவீதம் பேர் சிறு விவசாயிகளாக உள்ளனர். விவசாயிகளுக்காக இந்த அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. பயிர்ச் சேதத்திற்காக விவசாயிகளுக்கு ஒரு லட்சம் கோடி ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளது.

மத்திய அரசின் திட்டங்களால் வேளாண் பொருள்களின் உற்பத்தி பல மடங்கு உயர்ந்துள்ளது. விவசாயிகளின் நலனுக்காகவே 3 வேளாண் சட்டங்கள் கொண்டுவரப்பட்டன. இந்தச் சட்டங்கள் சிறு விவசாயிகளை வலுப்படுத்தும். விவசாய சட்டங்களுக்கு ஆதரவளித்த விவசாயிகளுக்கு நன்றி. 3 வேளாண் சட்டங்களும் நாடாளுமன்றத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில், 3 வேளாண் சட்டங்களையும் மீளப் பெறப்படத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் தங்கள் போராட்டத்தைக் கைவிடவேண்டும். நாடாளுமன்ற குளிர்காலக் கூட்டத் தொடரில் 3 வேளாண் சட்டங்களும் திரும்பப் பெறப்படும்" என்று அவர் தெரிவித்துள்ளார்.



## அநீதிக்கு எதிரான போராட்டத்திற்கு கிடைத்த வெற்றி விவசாயிகளுக்கு வாழ்த்துத் தெரிவித்து ராகுல் பதிவு

கடந்த ஆண்டு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட 3 வேளாண் சட்டங்களும் திரும்பப் பெறப்படுகின்றன என இந்தியப் பிரதமர் மோடி அறிவித்துள்ளதையடுத்து பலரும் தமது எண்ணங்களைத் தெரிவித்து வருகின்றனர். இது தொடர்பாக காங்கிரஸ் எம்.பியான ராகுல்காந்தி தனது டுவிட்டர் பக்கத்தில், விவசாயிகளின் சத்தியாக்கிரகத்திற்கு வெற்றி கிடைத்துள்ளது.

நாட்டிற்கே உணவளிப்பவர்கள் தங்களின் சத்தியாக்கிரகம் மூலம் ஆணவத்தை தலை குனியச் செய்துள்ளனர், எனப் பதிவிட்டுள்ளார். அநீதிக்கு எதிரான போராட்டத்திற்குக் கிடைத்த வெற்றிக்கு வாழ்த்துக்கள் என்றும் ராகுல் காந்தி கூறியுள்ளார்.

தான் உரையாற்றிய முன்னைய காணொலி ஒன்றையும் அவர் தனது பதிவில் மேற்கோள் காட்டியுள்ளார். அதில், "விவசாயிகளின் போராட்டத்தை கண்டு பெருமிதம் கொள்கிறேன். நான் அவர்களுடனே துணை நிற்கிறேன். தொடர்ந்து அவர்களுக்கு ஆதரவாக இருப்பேன். என்னுடைய வார்த்தைகளைக் குறித்துக்கொள்ளுங்கள். இந்த அரசு வேளாண் சட்டங்களை திரும்பப்பெறவேண்டிய அழுத்தத்துக்குள்ளாகும்" என்று அதில் தெரிவித்திருந்தமையை நினைவுகூர்ந்திருக்கிறார்.

## காஷ்மீர் முன்னாள் முதல்வர் மெகபூபா முப்தி மீண்டும் வீட்டுக்காவலில் இருக்கிறாராம்



இந்திய அரசு குறித்து கருத்து தெரிவித்த தன்னை மீண்டும் வீட்டுக்காவலில் வைத்திருக்கின்றனர் என காஷ்மீரின் முன்னாள் முதல்வர் மெகபூபா முப்தி தெரிவித்துள்ளார்.

காஷ்மீரில் கடந்த சில நாள்களுக்கு முன் ஹெதர் போரா பகுதியில் பயங்கரவாதிகளுக்கும் இந்தியப் பாதுகாப்புப் படையினருக்கும் இடையே நடந்த மோதலில் பயங்கரவாதிகள் சிலர் சுட்டுக்கொல்லப்பட்டனர் என்றும் இந்தத் தாக்குதலில் பயங்கரவாதிகளுக்கு உதவினார் என அவர்கள் தங்கியிருந்த வீட்டின் உரிமையாளரும் பலியானார் என்றும் செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்தச் சம்பவத்தில் பலியான வீட்டின் உரிமையாளர் பயங்கரவாதி இல்லை என்றும் இராணுவம் அத்துமீறி மக்கள் மீது தாக்குதலை நடத்துகிறது எனவும் தெரிவித்து ஜம்மு காஷ்மீரில் பல இடங்களில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. முக்கியமாக இறந்தவரின் உடலைக் கையளிக்கும்படி அவர் குடும்பத்தினர் கேட்டு போராட்டம் நடத்தினர்.

இந்தநிலையில், காஷ்மீரின் முன்னாள் முதல்வர் மெகபூபா முப்தியோடு தொடர்புகொண்ட ஊடகவியலாளர்களிடம், இந்திய மத்திய அரசு அப்பாவி மக்களைக் கேடயமாகப் பயன்படுத்தித் தாக்குதலை நடத்துகிறது. இது மனிதத்தன்மையற்ற செயல் எனக் கண்டனம் தெரிவித்தேன். இதையடுத்து என்னை வீட்டுக்காவலில் வைத்துள்ளனர், என்று அவர் தெரிவித்துள்ளார்.

## வேளாண் சட்டங்கள் மீளப்பெறப்பட்டன தமிழக விவசாயிகள் கொண்டாட்டம்



வேளாண் சட்டங்களை திரும்பப் பெற்றமையை வரவேற்று தமிழகம் முழுவதும் பட்டாசு வெடித்தும் இனிப்புகள் வழங்கியும் கொண்டாடி வருகின்றனர்.

இந்திய மத்திய அரசு கொண்டுவந்த மூன்று புதிய வேளாண் சட்டங்களை திரும்பப் பெறவேண்டும் என வலியுறுத்தி விவசாய சங்கங்கள் டெல்லியில் கடந்த ஓராண்டு காலமாக போராடி வருகின்றன. இந்த நிலையில், இன்று பிரதமர் மோடி, சர்ச்சைக்குரிய புதிய 3 வேளாண் சட்டங்களையும் திரும்பப் பெறுகிறேன் என அறிவித்துள்ளார்.

இதையடுத்து இந்த அறிவிப்பை நாடு முழுவதும் உள்ள விவசாயிகள் உற்சாகமாகக் கொண்டாடி வருகின்றனர். தமிழகத்தின் பல பகுதிகளிலும் விவசாயிகள் பட்டாசு வெடித்தும், இனிப்புகள் வழங்கியும் தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளனர்.

## பா.ஜ.கவின் இன்னல்களை எதிர்த்து போராடிய விவசாயிகளுக்கு மம்தா வாழ்த்துத் தெரிவிப்பு



3 புதிய வேளாண் சட்டங்களும் மீளப் பெறப்படுகின்றன என இந்தியப் பிரதமர் மோடி இன்று அறிவித்துள்ள நிலையில், இதுகுறித்து கருத்து வெளியிட்ட மேற்கு வங்க மாநில முதலமைச்சர் மம்தா பானர்ஜி, "பா.ஜ.க. அளித்த இன்னல்களிலும் துவண்டுவிடாமல் அயராது போராடிய ஒவ்வொரு விவசாயிக்கும் என் மனமார்ந்த வாழ்த்துக்கள். இது உங்கள் வெற்றி. இந்தப் போராட்டத்தில் அன்புக்குரியவர்களை இழந்த அனைவருக்கும் ஆழ்ந்த இரங்கல்கள்" எனத் தெரிவித்துள்ளார்.

## தேர்தல் தோல்வி ஏற்படும் என்ற அச்சமே பா.ஜ.கவின் விவசாயச் சட்ட முடிவாகும்



புதிய வேளாண் சட்டங்கள் மூன்றும் திரும்பப் பெறப்படுவது பற்றி,முன்னாள் மத்திய அமைச்சரும் காங்கிரஸ் மூத்த தலைவருமான ப.சிதம்பரம் கூறுகையில், "வேளாண் சட்டங்களை அரசு விலக்கிக்கொள்ளும் என்ற அறிவிப்பு எதைக் குறிக்கிறது? விவசாயிகளின் தொடர் போராட்டத்திற்குச் செவிமடுக்காத அரசு, எதிர்வரும் மாநிலத் தேர்தல்களில் தோல்வி ஏற்படும் என்று அஞ்சி இந்த முடிவை எடுத்திருக்கிறது.

இந்த முடிவின் பொருள் பா.ஜ.க. அரசு தன்னுடைய தவறை உணர்ந்து கொண்டது என்பதல்ல. பிரதமருக்கு உண்மையான மனமாற்றம் ஏற்பட்டது என்பதல்ல. தேர்தல் தோல்வியை எப்படித் தவிர்ப்பது என்பது ஒன்றே அவர்கள் குறிக்கோள். இடைத் தேர்தல்களில் தோல்வியைச் சந்தித்த பிறகு பெற்றோல், டீசல் விலையைக் குறைத்தார்களே, அது போலத்தான் இந்த முடிவும். மக்கள் குரலை விட தேர்தல் தோல்வி அச்சமே பா.ஜ.க. அரசின் போக்கை மாற்றும் என்பதை மக்கள் புரிந்து கொள்ளவேண்டும்" என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

# முஸ்லிம் அரசியல் தலைமைகளால் மக்கள் ஏமாற்றப்பட்ட வரலாறு உண்டு

## பொதுச்சேவை ஆணைக்குழு உறுப்பினர் ஏ.எல்.எம். சலீம் தெரிவிப்பு

நகர சபைக்கு வாக்களித்த எமது மக்களை பலமுறை முஸ்லிம் அரசியல் தலைமைகளால் ஏமாற்றப்பட்ட வரலாறுகள் இன்றும் ஆறாக் காயங்களாக இருக்கின்றன. சாய்ந்தமருது நகர சபை கோரிக்கையை அடிப்படையாகக் கொண்டு கடந்த காலங்களில் பல தேர்தல்கள் நடைபெற்று உள்ளன என தேசிய காங்கிரஸின் கடந்த பொதுத்தேர்தல் வேட்பாளரும் சிரேஷ்ட இலங்கை நிர்வாக சேவை அதிகாரியுமான, பொதுச் சேவை ஆணைக்குழு உறுப்பினர் ஏ.எல்.எம். சலீம் தெரிவித்துள்ளார்.



குறிப்பாக, 2014ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல், 2015ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதத்தில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தல், 2018ஆம் ஆண்டில் பெப்ரவரி மாதம் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தல், 2019ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல், 2020ஆம் ஆண்டு ஓகஸ்ட் நடைபெற்ற நாடாளு மன்றத் தேர்தல் என்று பல தேர்தல்களை கடந்து செல்லும் எமது நகர சபை கோரிக்கை மற்றுமொரு தேர்தலுக்கு எப்படியும் ஒரு பேசுபொருளாக வரமுடியாது என்ற ஒருமித்த நிலைப்பாட்டில் எமது மக்கள் அனைவரும் இருக்கின்றனர் என அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2014ஆம் ஆண்டு முதல் நேரடியாகவும், மறைமுகமாகவும் பல அரசியல்வாதிகளால் ஏமாற்றப்பட்ட சாய்ந்தமருது மக்கள், சாய்ந்தமருது ஜும்மா பள்ளிவாசல் தலைவர் வை.எம். ஹனீபாவின் தலைமையில் 2017ஆம் ஆண்டு ஒக்ரோபர், நவம்பரில் போராட்டம் நடத்தி ஒன்றுபட்டு, 2018ஆம் ஆண்டில் நடைபெற்ற உள்ளூராட்சி தேர்தலில் பெற்ற ஜனநாயக ரீதியான வெற்றியானது இப்பிரதேச அரசியல் வரலாற்றில் குறிப்பிடத்தக்க படிப்பினையை ஏமாற்றிய அனைவருக்கும் ஏற்படுத்தி உள்ளது. அதிலும் குறிப்பாக எம்மை ஏமாற்றிய அனைவரையும் புறந்தள்ளி, 2019 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தல் மற்றுமொரு பாரிய படிப்பினையாகும் என்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மட்டு.சித்தாண்டியில் ஓட்டோ–பஸ் விபத்து



மட்டக்களப்பு மாவட்டத்தின் சந்திவெளி பொலிஸ் பிரிவுக் குட்பட்ட சித்தாண்டியில் பஸ்ஸுடன் ஓட்டோ ஒன்று மோதி விபத்துக்கு உள்ளானதில் மூவர் படுகாயமடைந்த நிலையில் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர். நேற்று பகல் மட்டக்களப்பிலிருந்து வாழைச்சேனை நோக்கி பயணித்த பஸ்ஸுடன் சந்தி வெளியிலிருந்து செங்கலடி நோக்கி பயணித்த ஓட்டோ மோதி விபத்துக்குள்ளானது.

இதன்போது ஓட்டோவில் பயணித்த மூவரும் படுகாயமடைந்தநிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஓட்டோவின் சாரதி கவலைக்கிடமான நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

குறித்த விபத்து தொடர்பில் பஸ் சாரதி கைது செய்யப்பட்டுள்ளமையுடன் இது தொடர்பான விசார ணைகளை சந்திவெளி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# இளைஞன் திருடிச் சென்ற மோட்டார் சைக்கிளை உரிய நபரிடம் ஒப்படைத்த இளைஞரின் பெற்றோர்

இளைஞன் ஒருவன் திருடிச் சென்ற மோட்டார் சைக்கிளை அவனது பெற்றோர் உரிய நபரிடம் ஒப்படைத்துள்ள சம்பவமொன்று, நேற்று இடம்பெற்றுள்ளது.

ஓட்டமாவடியில் அமைந்துள்ள வர்த்தக நிலையம் ஒன்றுக்கு நேற்றுக் காலை மோட்டார் சைக்கிளில் சென்ற நபர் ஒருவர், மோட்டார் சைக்கிளை நிறுத்தி விட்டு பொருட்கள் கொள்வனவு செய்துள்ளார். அதனை அவதானித்துக் கொண்டிருந்த இளைஞன் ஒருவர், மோட்டார் சைக்கிளை திருடிக் கொண்டு அவனது வீட்டில் மறைத்து வைத்துள்ளார்.

குறித்த மோட்டார் சைக்கிளை கண்டு கொண்ட பெற்றோர், இளைஞனிடம் விசாரணைகளை மேற்கொண்டு வாழைச்சேனை பொலிஸாரின் முன்னிலையில் உரிய நபரிடம் மோட்டார் சைக்கிளை ஒப்படைத்துள்ளனர். இந்தத் திருட்டுச் சம்பவத்தைதடுக்க பெற்றோர் எடுத்துக் கொண்ட செயற்பாட்டுக்கு மோட்டார் சைக்கிள் உரிமையாளரும் பொலிஸாரும் திருட்டை செய்த இளைஞனின் பெற்றோருக்கு பாராட்டுக்களை தெரிவித்துள்ளனர்.

# திருமலை நாவலடி சந்தியில் விபத்து

திருகோணமலை சம்பூர் பொலிஸ் பிரிவிலுள்ள நாவலடி சந்தியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஓட்டோவுடன் சிறிய ரக டிராக்டர் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளதாக தெரிவிக்கும் பொலிஸார், விபத்தில் காயமடைந்த இருவரும் மூதூர் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவித்துள்ளனர்.

விபத்துக்குள்ளான 2 வாகனங்களும் சம்பூர் பொலிஸ் நிலையத்தில் நிறுத்தப்பட்டுள்ளமையுடன், சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை சம்பூர் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# திருகோணமலையில் குழு மோதல்

திருகோணமலை – கந்தளாய், பளுகஸ்வெவ சந்தியில் இரு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட மோதல் வாள்வெட்டு சம்பவ மாக மாறியுள்ளதோடு, சொத்துக்களுக்கும் தீவைக்கப் பட்டுள்ள சம்பவத்தால் அங்கு பதற்ற நிலைமை உருவாகியுள்ளது.

இச்சம்பவம் 17 ஆம் திகதி இடம்பெற்றிருந்த நிலையில், வாள்வெட்டுக்கு இலக்கான நபர் பலத்த காயங்களுடன் கந்தளாய் ஆதார வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.



இச்சம்பவத்தில் அங்கிருந்த லொறி, பெட்டிக்கடை ஒன்று தீவைக்கப்பட்டுள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் இருவரை கைது செய்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## விபச்சார விடுதி நடாத்திய குற்றச்சாட்டு:

# மாநகரசபை முதல்வரான சிவகீர்த்தாவுக்கு 50 ஆயிரம் தண்டப்பணம் செலுத்த உத்தரவு

மட்டக்களப்பில் விபச்சார விடுதி நடாத்திய குற்றச்சாட்டுத் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட முன்னாள் மட்டக்களப்பு மாநகர சபை முதல்வரான சிவகீர்த்தாவை 50 ஆயிரம் ரூபா தண்டப் பணமாகச் செலுத்துமாறு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிவான் ஏ.சி.எம். றிஸ்வான் உத்தரவிட்டுள்ளார்.

மட்டக்களப்பு திருகோணமலை வீதியில் இலங்கை போக்குவரத்துச் சபைக்கு முன்னால் அமைந்திருந்து முன்னாள் மாநகரசபை மேயரான சிவகீர்த்தாவின் வீட்டுடன் நடாத்தி வந்த தங்கு விடுதியில் இயங்கிவந்த விடுதியைக் கடந்த 2016 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 24 ஆம் திகதி பொலிஸார் முற்றுகை யிட்டனர். அத்துடன் அங்கு இருந்தவர்கள் உட்பட விடுதியை நடாத்திவந்த முன்னாள் மட்டக்களப்பு மாநகரசபை முதல்வரான சிவகீர்த்தாவையும் கைது செய்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட விளக்கமறியலில் வைக்கப்பட்ட அவருக்கு எதிராக பொலிஸார் வழக்கு தொடர்ந்து நீதிமன்றில் முன்னிறுத்திய நிலையில் அவருக்கு எதிராக மட்டக்களப்பில் சட்டத்தரணிகள் ஆஜராகாத நிலையில் 3 மாத காலத்தின் பின்னர் அவர் நீதிமன்ற பிணையில் வெளிவந்தார்.

இதனைத் தொடர்ந்து கடந்த 4 வருடங்களாக வழக்கு விசாரணைகள் இடம்பெற்றுவந்த நிலையில், நேற்றைய தினம் குறித்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதிவான் ஏ.சி. எம். றிஸ்வான் முன்னாள் மாநகரசபை மேயரை 50 ஆயிரம் ரூபா தண்டப் பணமாகச் செலுத்துமாறு உத்தர விட்டுத் தீர்ப்பளித்துள்ளார்.



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# இலங்கையணியின் களத்தடுப்புப் பயிற்சியாளருக்கு கொரோனாத் தொற்று; டெஸ்ட் தொடர் ஆரம்பமாகுமா?



இலங்கைக் கிரிக்கெட் அணியின் களத்தடுப்புப் பயிற்சியாளர் ஷேன் மக்டெமொர்ட்டுக்குக் கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டதையடுத்து, ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகவுள்ள மேற்கிந்தியத் தீவுகளுடனான டெஸ்ட் தொடர் பாதிப்படைவதற்கான வாய்ப்பு இருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

மேற்கிந்தியத் தீவுகளுடனான டெஸ்ட் தொடருக்காக காலி மைதானத்தில் இலங்கை அணி வீரர்களோடு பயிற்சியில் ஈடுபட்டிருந்த ஷேன் மக்டெமொர்ட் கொரோனாத் தொற்றுக்குள்ளானமை கண்டறியப்பட்டது. உடனடியாக அவர் தன்னைத் தனிமைப்படுத்திக் கொண்டுள்ளார். அதையடுத்து அவரோடு நெருங்கிய தொடர்பைப் பேணிய தலைமைப் பயிற்சியாளர் மிக்கி ஆர்தர், துடுப்பாட்டப் பயிற்சியாளர் கிரான்ட் பிளவர், பிஸியோ தெரபிஸ்ட் பிரெட் ஹறொப் ஆகியோரும் தம்மைத் தனிமைப்படுத்திக்கொண்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஷேன் மக்டெமொர்ட்டைத் தவிர வேறு யாருக்கும் தொற்று அடையாளம் காணப்படாவிட்டாலும் போட்டி ஆரம்பமாவதற்கு முன்னதாக அடுத்தடுத்து மேற்கொள்ளப்படும் பரிசோதனைகளில் வீரர்கள் யாருக்கும் தொற்று இல்லை என்பது உறுதியானால் தான் டெஸ்ட் தொடர் ஆரம்பிக்கப்படும் என்று தெரிகிறது.



# பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கிண்ணக் கால்பந்தாட்டம் இறுதிப்போட்டியின் விசேட அதிதியாக ஃபிபா தலைவர்

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கிண்ணக் கால்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டியில் சீசெல்ஸ் அணியை இலங்கை அணி எதிர்கொள்ளவுள்ளது.

கொழும்பு குதிரைப் பந்தயத்திடல் அரங்கில் இன்று இரவு 7 மணிக்கு ஆரம்பமாகும் இந்த இறுதிப்போட்டியில் வெற்றி பெறும் அணிக்கு சம்பியன் கிண்ணத்துடன் முப்பதாயிரம் அமெரிக்க டொலர்கள் ரொக்கப் பரிசாக வழங்கப்படவுள்ளது.

இரண்டு நாள்கள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கையை வந்துள்ள சர்வதேச கால்பந்தாட்டச் சம்மேளனத்தின் தலைவர் கியானி இன்பன்டினோ, இன்று நடைபெறும் இறுதிப்போட்டியில் விசேட அதிதியாக கலந்துகொள்கிறார்.



## பாலியல் குற்றச்சாட்டையடுத்து

# ஆஸ்திரேலியா அணித் தலைவர் பதவியிலிருந்து பெய்ன் விலகல்

பெண்ணொருவருக்கு சங்கடத்துக்குரிய தகவல்களை அனுப்பிய விவகாரம் மீண்டும் பேசுபொருளானதையடுத்து, ஆஸ்திரேலிய டெஸ்ட் கிரிக்கெட் அணியின் தலைவர் பொறுப்பில் இருந்து டிம் பெய்ன் விலகியுள்ளார்.

2018 ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவுடன் நடைபெற்ற டெஸ்ட் தொடரின்போது பந்தைச் சேதப்படுத்திய குற்றத்துக்காக டேவிட் வோனர் மற்றும் ஸ்டீவ் ஸ்மித் ஆகியோருக்கு ஓராண்டு கிரிக்கெட் விளையாடத் தடை விதிக்கப்பட்டதையடுத்து, டிம் பெய்னை அணித்தலைவராக நியமித்தது ஆஸ்திரேலிய கிரிக்கெட் வாரியம். அப்போதே பெண் ஒருவர் டிம் பெய்ன் தனக்கு ஆபாச படங்களையும் குறுஞ்செய்திகளையும் அனுப்பினார் என புகார் அளித்தார். ஆனால், அதனையடுத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் இவ்விவகாரம் தொடர்பாக டிம் பெய்னின் கிரிக்கெட் வாழ்வின் மீது நடவடிக்கை எடுக்கவேண்டியதில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

தற்போது இந்த விவகாரம் மீண்டும் பரவலான கவனத்தைப் பெற்றுள்ள நிலையில் ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் தலைவர் பொறுப்பிலிருந்து டிம் பெய்ன் விலகியுள்ளார். இது குறித்து ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு அவர் அறிவித்துள்ளார். இது என்னாலேயே நம்ப முடியாத முடிவு. ஆனால், எனக்கும் எனது குடும்பத்திற்கும் கிரிக்கெட்டிற்கும் சரியான முடிவு. நடந்த சம்பவம் குறித்து அப்போது நான் வருந்தினேன். இன்றும் வருந்துகிறேன். எனது குடும்பத்தினர் என்னை மன்னித்துவிட்டனர். இந்தச் சம்பவம் பொது வெளியில் பெரியளவில் பேசுபொருளாகும் என்பதை சில வாரங்களுக்கு முன்பு அறிந்தேன் என்று அவர் தெரிவித்திருக்கிறார்.

எனது மனைவி, குடும்பத்தினர் மற்றும் இதர தரப்பினருக்கு நான் காயத்தை ஏற்படுத்தியதற்காக வருந்துகிறேன். இதனால், நமது ஆஸ்திரேலிய அணியின் நற்பெயருக்கு ஏதேனும் சேதம் ஏற்பட்டால் வருந்துகிறேன். உடனடியாக அணித்தலைவர் பதவியிலிருந்து விலகுவதுதான் சரியான முடிவு என நான் நம்புகிறேன். ஆஷ் தொடருக்கு முன்னால், பெரிய சர்ச்சையை உருவாக்க நான் விரும்பவில்லை எனவும் டிம் பெய்ன் கூறியிருக்கிறார்.

ஆஸ்திரேலிய அணித்தலைவர் பதவியிலிருந்து அவர் விலகியிருந்தாலும், ஆஷ் தொடருக்கான அணியில் அவர் இடம்பெறுவார் என ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை தகவல்கள் உறுதிப்படுத்தியுள்ளன

## அனைத்துவகைக் கிரிக்கெட்டிலிருந்தும்

# ஏபி டி வில்லியர்ஸ் ஓய்வுபெற்றார்



அனைத்து வகையான கிரிக்கெட் போட்டிகளில் இருந்தும் தான் ஓய்வு பெறுகிறேன் என தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் நட்சத்திர வீரர் ஏபி டி வில்லியர்ஸ் அறிவித்துள்ளார்.

இது குறித்து தன்னுடைய டுவிட்டர் பதிவில் என்னுடைய கிரிக்கெட் பயணம் மிகவும் அற்புதமாக இருந்தது. நான் ஒவ்வொரு போட்டியையும் அனுபவித்து விளையாடினேன். இப்போது வயது 37 ஆகிறது. எந்தச் சுடரும் எப்போதுமே பிரகாசமாக எரியமுடியாது.

இந்த நிதர்சனத்தை நாம் புரிந்துகொள்ள வேண்டும். அதனால்தான், நீண்ட சிந்தனைக்குப் பின்னர் இன்று என்னுடைய ஓய்வை அறிவித்திருக்கிறேன். இந்த நெடுந்தூரப் பயணத்தில் என்னுடன் பயணித்த அனைவருக்கும் நன்றிகள் என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

இந்த கிரிக்கெட் பயணத்தில் தென்னாபிரிக்கா மற்றும் இந்தியாவில் எனக்கு கிடைத்த அன்பும், ஆதரவும் அபாரமானது. கிரிக்கெட் என்னுடன் எப்போதும் அன்புடன் இருந்திருக்கிறது. நான் தென்னாபிரிக்காவுக்காகவும், ஆ.ர்.சி.பிக்காகவும் விளையாடும்போதும் அது குறையவே இல்லை. அதற்காக நான் எப்போதும் நன்றியுடன் இருப்பேன். என் கிரிக்கெட் வாழ்க்கைகாக என்னுடைய குடும்பத்தினர் நிறையவே தியாகங்களைச் செய்துள்ளனர். என்னுடைய விளையாட்டுச் சப்பாத்துகளுக்கு ஓய்வைக் கொடுத்துவிட்டு அவர்களோடு என்னுடைய நேரத்தைச் செலவிடுவதற்கு தீர்மானித்திருக்கிறேன் என்று டிவில்லியர்ஸ் தெரிவித்திருக்கிறார்.

கடந்த 2018 ஆம் ஆண்டு மே மாதம் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுகிறேன் என அறிவித்த டிவில்லியர்ஸ், ரி-20 லீக் போட்டிகளில் தொடர்ந்து விளையாடிவந்தார். ஐ.பி.எல். கிரிக்கெட்டில் பெங்களூரு ரோயல் சலஞ்சர்ஸ் அணிக்காக 2011 இல் களமிறங்கிய அவர் இதுவரை அந்த அணிக்காக 157 போட்டிகளில் விளையாடி 4,522 ஓட்டங்களைக் குவித்திருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. அண்மையில் நடைபெற்று முடிந்த இந்த வருடத்துக்கான ஐ.பி.எல். தொடரில் 15 போட்டிகளில் 313 ஓட்டங்களை அவர் எடுத்திருந்தார்.

# ஏ.டி.பி. பைனல்ஸ் டென்னிஸ் தொடர் அரையிறுதியில் டேனில் மெட்வெடேவ்

ஏ.டி.பி. பைனல்ஸ் டென்னிஸ் தொடரின், குழுநிலைப் போட்டியில் வெற்றிபெற்று ரஷ்யாவின் டேனில் மெட்வெடேவ் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார். இன்று நடைபெற்ற போட்டியில், ரஷ்யாவின் டேனில் மெட்வெடேவும் இத்தாலியின் ஜென்னிக் சின்னரும் மோதினர். பரபரப்பாக நடைபெற்ற இப்போட்டியில், முதல் செட்டை 6-0 என்ற கணக்கில் டேனில் மெட்வெடேவ் எளிதாகக் கைப்பற்றினார். இரண்டாவது செட்டில், சிறப்பாக விளையாடிய ஜென்னிக் சின்னர், மெட்வெடேவுக்கு கடும் நெருக்கடி கொடுத்தார். இதனால், செட் டை பிரேக் வரை நகர்ந்தது. இதில் சிறப்பாக விளையாடிய ஜென்னிக் சின்னர், செட்டை 7-6 என கைப்பற்றினார். இருவரும் தலா ஒரு செட்டைக் கைப்பற்றியதால் வெற்றியைத் தீர்மானிக்கும் மூன்றாவது செட் பரபரப்படைந்தது. இதில் இருவரும் விட்டுக்கொடுக்காமல் சிறப்பாக விளையாட, அந்த செட்டும் டை பிரேக் வரை நீண்டது. ஆனால், இறுதிவரை போராடிய டேனில் மெட்வெடேவ், செட்டை 7-6 என கைப்பற்றி அரையிறுதிக்கு முன்னேறினார். ரஷ்யாவின் அன்ட்ரே ருபெலவ், நோர்வேயின் கஸ்பர் ருட் ஜோடி மோதும் போட்டியின் வெற்றியாளரோடு மெட்வெடேவ் அரையிறுதியில் மோதுவார்.

மற்றொரு அரையிறுதிப்போட்டியில் ஜேர்மனியின் அலெக்சான்டர் ஸ்வரேவ், உலகின் முதல் நிலை வீரரான நோவாக் ஜோகோவிச்சை எதிர்கொள்ளவிருக்கிறார்.

# எந்த இரகசிய ஒப்பந்தங்களும் அரசுடன் எமக்குக் கிடையாது

## ரிஷாத் திட்டவட்டம்

அரசாங்கத்துடன் இரகசிய ஒப்பந்தம் எதுவும் கிடையாது என நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், வரவு – செலவுத் திட்டத்தை ஆதரிப்பதா? இல்லையா? என்பது தொடர்பில் எதிர்வரும் 21 ஆம் திகதி முடிவு செய்யப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

அக்குறனை பகுதியில் வைத்து ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போதே அவர் இதனைக் கூறியுள்ளார். தொடர்ந்தும் கருத்து வெளியிடுகையில –

‘இந்த வரவு – செலவுத் திட்டம் தொடர்பாக நாங்கள்திருப்தியடையவில்லை. இந்நிலையில், வரவு – செலவுத் திட்டத்தை ஆதரிப்பதா இல்லையா என்பது தொடர்பாக 21 ஆம் திகதி கட்சி மத்திய குழு கூடி முடிவெடுக்கும்.

நான் அண்மையில் நாடாளுமன்றத்தில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்து பேசியிருந்த நிலையில், அரசாங்கத்துடன் எமக்கு ஒப்பந்தம் இருப்பதாக சிலர் கருதுகின்றனர். அரசாங்கத்துடன் எங்களுக்கு அத்தகைய ஒப்பந்தம் எதுவும் இல்லை,

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த ஒன்பது வருடங்களில் நான் அந்த அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட்டேன். அந்த நேரத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் நானும் வடக்கு, கிழக்கை அபிவிருத்தி செய்வதற்கும் நாட்டை அபிவிருத்தி செய்வதற்கும் பல பணிகளைச் செய்தோம்.

நாட்டுக்காக உழைத்த சிறந்த தலைவர் என்பதை அவர் நிரூபித்துள்ளார். ஆனால் தற்போதைய அரசு கடந்த இரண்டு ஆண்டுகளாக எதையும் செய்யவில்லை. பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து நாடு பின்னோக்கிச் செல்வதுதான் நடந்துள்ளது. –என்று அவர் மேலும் கூறினார். இதனிடையே, அரசமைப்பின் 20 ஆவது திருத்தத்துக்கு எமது கட்சியின் பல உறுப்பினர்கள் அரசாங்கத்துக்கு ஆதரவளித்தமை உண்மைதான். ஆனால் அது எங்கள் கட்சியின் கருத்து அல்ல. அது நாடாளுமன்ற உறுப்பினர்களின் தனிப்பட்ட கருத்து.

இன்று சில அமைச்சர்கள் வீதியில் இறங்கி அரசாங்கத்தைப் பொதுமக்களிடமும் ஊடகங்களிடமும் விமர்சிக்கின்றார்கள்.

ஆனால் நாடாளுமன்றத்தில் அரசாங்கத்திற்கு எதிராக ஒரு வார்த்தை கூட பேசுவதில்லை. சாலைகளில் அரசாங்கத்தை விமர்சிப்பதை விடுத்து அதை நாடாளுமன்றில் செய்ய வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# யாழ். பல்கலை விவசாய உயிரியல் துறை சான்றிதழ் கற்கைக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாய உயிரியல் துறை சான்றிதழ் கற்கை நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

காளான் உற்பத்தி மற்றும் பதனிடல் தொழிநுட்பம், மண்புழு தொழிநுட்பம் ஆகிய இரு கற்கை நெறிகளுக்குமே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

06 மாதங்களைக் கொண்ட இந்தக் கற்கை நெறி வார இறுதி நாள்களில் நடைபெறவுள்ளது.

தமிழ் மொழி மூலம் நடைபெறும் இந்தக் கற்கை நெறிக்கு தரம் 09 வரையில் கல்வி கற்றவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள் ஆவார்கள். ஒரு கற்கை நெறிக்கான கட்டணமாக 8 ஆயிரம் ரூபா அறவிடப்படவுள்ளது.

விண்ணப்பப்படிவங்களை யாழ்.பல்கலைக்கழக விவசாய பீட பீடாதிபதி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

விண்ணப்பதாரிகள் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்துடன், தமது தகைமைகளை உறுதிப்படுத்தும் ஆவண பிரதிகளையும் இணைத்து எதிர்வரும் 24ஆம் திகதிக்கு முன்னர் பீடாதிபதி, விவசாய பீடம், யாழ்.பல்கலைக்கழகம், கிளிநொச்சி வளாகம், அறிவியல் நகர் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ள இணைப்பாளர் கலாநிதி க.பகீரதனுடன் 0212060171 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# டெங்குக் காய்ச்சலால் பாதிக்கப்படும் குழந்தைகள் எண்ணிக்கை அதிகரிப்பு

டெங்குக் காய்ச்சலால் வைத்தியசாலையில் சேர்க்கப்படும் குழந்தைகளின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வருவதாக சீமாட்டி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலை தெரிவித்துள்ளது.

நாட்டில் நிலவும் மழையுடனான காலநிலையால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக வைத்தியசாலையின் பணிப்பாளர், வைத்தியர் ஜீ. விஜேசூரிய தெரிவித்துள்ளார். சாதாரணமாக நாளொன்றில் 5 டெங்கு நோயாளர்கள் பதிவாகி வந்த நிலையில், தற்போது ஒரு நாளில் 25 இற்கும் அதிகமானவர்கள் சேர்க்கப்படுகின்றனர் என அவர் குறிப்பிட்டுள்ளார். எனவே, டெங்குப் பரவல் தொடர்பாகப் பெற்றோரை அதிக கவனம் செலுத்துமாறு அவர் வலியுறுத்தியுள்ளார்.

# இருமல், காய்ச்சல் இருப்பவர்கள் வீட்டைவிட்டு வெளியேறவேண்டாம்

## சுதர்ஷினி வலியுறுத்து

மாணவர்களின் கல்வி நடவடிக்கையை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்கு மக்கள் பொறுப்புணர்வுடன் செயற்பட வேண்டுமென இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே தெரிவித்துள்ளார்.

அதற்கமைய மாணவர்களுக்கு கொரோனா வைரஸ் அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்துமாறும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்தோடு, காய்ச்சல், இருமல் இருக்கும் சிறுவர்களை பாடசாலைக்கு அனுப்ப வேண்டாமென்றும் பெற்றோர்களிடம் அவர்கோரிக்கைவிடுத்துள்ளார்.

அத்துடன் இருமல், காய்ச்சல் இருப்பவர்கள் வேலைக்கு செல்லவும் வேண்டாம் என அவர் தெரிவித்துள்ளார்.

# யாழில் வாழைக்குற்றிக்கு நேற்று கடுமையான மவுசு

## ஒரு குற்றி 100 ரூபா



யாழ்ப்பாணத்தில் வாழைக் குற்றிகளுக்கு திடீரென மவுசு ஏற்பட்டுள்ளது.

கார்த்திகை தீப திருநாளான நேற்று (வியாழக் கிழமை) இந்துக்கள் வீடுகளில் தீபமேற்றி வழிபட்டார்கள்.

அதில் ஓர் அங்கமாக தங்களது வீடுகளுக்கு முன்னால் வாழைக்குற்றியை நட்டு அதன் மேல் சட்டியில் எண்ணெய் ஊற்றி, திரி வைத்து தீபமேற்றினர்.

அதனால் யாழ்.நகர் பகுதியை அண்டிய பகுதிகளில் வாழைக்குற்றிகளை சிலர் விற்பனை செய்தனர்.

ஒரு வாழைக்குற்றி 50 ரூபா தொடக்கம் 100 ரூபா வரையில் விற்பனை செய்யப்பட்டது. அதேவேளை இம்முறைசிட்டிகளும்பலவர்ணங்கள் மற்றும் வடிவமைப்பில் விற்பனை செய்யப்பட்டன.

# மதுபோதையில் இளைஞர் குழு வவுனியா வீதிகளில் அட்டகாசம்

வவுனியா - மன்னார் பிரதான வீதியில் காமினி மகா வித்தியாலயத்துக்கு முன்பாக மதுபோதையில் இளைஞர் குழுவொன்று வீதியால் சென்றவர்களை வழிமறித்து தாக்குதல் நடத்தியதில் ஆசிரியர் ஒருவர் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கடந்த புதன்கிழமை இரவு 9 மணிக்கு பின்னர் சுமார் ஒரு மணிநேரமாக குறித்த இளைஞர்குழு அந்த வீதியால் பயணிப்பவர்களை வழிமறித்து தாக்குதல் மேற்கொண்டதுடன், வீதியின் குறுக்கே தமது மோட்டார் சைக்கிள்களைநிறுத்தி அட்டகாசம்புரிந்துள்ளனர்.

அத்துடன் அவர்களது தகாத வார்த்தைப் பிரயோகங்களால் அருகில் உள்ள வீடுகளில் வசித்தோர் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர். இதன்போது குறித்த இளைஞர் குழுவினர் அந்தப் பாதையூடாக மோட்டார் சைக்கிளில் பயணித்த ஆசிரியர் ஒருவர் மீதும் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர். இதில் காயமடைந்த நிலையில் பண்டாரிக்குளம் விபுலானந்தா கல்லூரி ஆசிரியர் ஒருவர் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையின் விபத்து பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, வவுனியா வைரவர் கோவில் வீதி, கதிரேசு வீதி, மன்னார் வீதி ஆகிய பகுதிகளில் அண்மைக்காலமாக இளைஞர் குழுக்களின் அட்டகாசம் அதிகரித்து செல்வதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

# யாழில் விறகுக்கு கடும் கேள்வி!

எரிவாயு விலையேற்றம், தட்டுப்பாடு மற்றும் மண்ணெண்ணய் தட்டுப்பாடு காரணமாக யாழில் விறகுகளுக்கு கேள்வி ஏற்பட்டுள்ளது.

இதனால் சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிள் என்பவற்றில் விறகு கட்டி விற்பனையில் சிலர் ஈடுபட்டுள்ளனர்.

ஒரு சைக்கிள் கட்டு விறகு 1,800 ரூபாவுக்கும், ஒரு மோட்டார் சைக்கிள் கட்டு விறகு 2 ஆயிரத்து 500 ரூபாவுக்கு அதிகமாக விற்பனை செய்யப்படுகின்றன.

# வவுனியாவில் மாவீரர்தினம் அனுஷ்டிக்க 8 பேருக்கு நீதிமன்றம் தடை உத்தரவு!

மாவீரர் தினத்தினை அனுஷ்டிப்பதற்கு வவுனியா நீதிமன்றம் 8 பேருக்கு தடை உத்தரவை வழங்கியுள்ளது.

தமது பிரிவில் எதிர்வரும் 20 ஆம் திகதி முதல் 29 ஆம் திகதி வரை மாவீரர் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன என வவுனியா தலைமை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியால் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்துக்கமைய வவுனியா நீதின்றம் குறித்த 8 பேருக்கு தடை உத்தரவை வழங்கியுள்ளது.

அந்தவகையில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி அனந்தன், சிவமோகன், காணாமல் போனவர்களின் உறவினர்களின் சங்கத்தைச் சேர்ந்த கோ. ராஜ்குமார், கா.ஜெயவனிதா, முன்னாள் மாகாணசபை உறுப்பினர் ப.சத்தியலிங்கம், கஜேந்திரகுமார் அல்லது கயன், சு.தவபாலசிங்கம், செ.அரவிந்தன் ஆகியோருக்கு இந்தத் தடை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

மேற்குறித்த நபர்கள் வவுனியா பொலிஸ் பிரிவில் எதிர்வரும் 20 ஆம் திகதியில் இருந்து 29 ஆம் திகதி வரை மாவீரர் நிகழ்வை அல்லது அதனுடன் தொடர்புடைய அனைத்து நிகழ்வுகளையும் நிறுத்துவதற்கு கட்டளையிடப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் 12 ஆம் மாதம் 6ஆம் திகதி நீதிமன்றில் பிரசன்னமாகுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.11.2021இல் வெளியிடப்பெற்றது.